17-09-2023 காலை முரளி ஓம் சாந்தி ''அவ்யக்த பாப்தாதா'' ரிவைஸ் 13.12.95

## வீணான பேச்சு, தொந்தரவு செய்யக்கூடிய பேச்சிலிருந்து தன்னை விடுவித்து வார்த்தைகளை சிக்கனம் செய்திடுங்கள்

இன்று பாப்தாதா நாலாபுறங்களிலும் உள்ள ஆத்மாக்களை, உங்கள் அனைவருடனும் சேர்த்து பார்த்துக் கொண்டு இருக்கின்றார்கள். நாலாபுறங்களில் உள்ள குழந்தைகள் ஆகார ரூபத்தில் பாப்தாதாவிற்கு முன்னால் இருக்கின்றார்கள். இரட்டை சபை, சாகாரி மற்றும் ஆகாரி ஆகிய இரண்டும் எவ்வளவு பெரிய சபையாக இருக்கின்றது. பாப்தாதா இரண்டு சபைகளின் குழந்தை களைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்து கொண்டு இருக்கின்றார்கள், ஏனென்றால், பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும் விசேஷமாக இரண்டு ரூபங்களில் பார்த்துக் கொண்டு இருக்கின்றார்கள். ஒன்று - ஒவ்வொரு குழந்தையும் இந்த அனைத்து மனித ஆத்மாக்களின் பூர்வஜ் (மூதாதையர்), முழு விருட்சத்தின் அஸ்திவாரம் ஆவார்கள். ஏனெனில், வேரிலிருந்து முழு மரம் வெளிப்படுகிறது மேலும், இரண்டாவது பெரியவர்களையும் பூர்வஜ் என்று கூறுகின்றார்கள். எனவே, சிருஷ்டியின் ஆதியில் ஆத்மாக்களாகிய உங்களுடைய பாகம் தான் உள்ளது, ஆகையினால், பெரியவரிலும் பெரியவர்கள் ஆவீர்கள், இந்த காரணத்தினால் அனைத்து ஆத்மாக்களுக்கும் மூதாதையர் ஆவீர்கள். அதன் கூடவே, பிராமண ஆத்மாக்களாகிய நீங்கள், உயர்ந்ததிலும் உயர்ந்த தந்தையின் முதல் படைப்பு ஆவீர்கள். எனவே, எவ்வாறு உயர்ந்ததிலும் உயர்ந்தவர் பகவானோ, அவ்வாறே நீங்கள் பெரியவரிலும் பெரிய பூர்வஜ் ஆவீர்கள். ஆகவே, அனைத்து பூர்வஜ் குழந்தைகளைப் பார்த்து தந்தை மகிழ்ச்சி அடைகின்றார். நாம் பூர்வஜ் என்று நீங்களும் கூட மகிழ்ச்சி அடை கின்றீர்கள் - இதே நம்பிக்கை மற்றும் போதையில் இருக்கின்றீர்களா? பாப்தாதா இன்று மூதாதையர்களின் சபையைப் பார்த்துக் கொண்டு இருக்கின்றார்கள்.

தந்தையின் குழந்தைகளாகிய நீங்கள் அனைவரும் மாயாவிடம் இருந்து பாதுகாப்பாக இருக்கிறீர் கள். குழந்தைகள் ஆகுவது என்றாலே தந்தையினுடையவர் ஆகுவது என்று அர்த்தம். எனவே, மாயாவிடம் இருந்து தப்பித்து தந்தையின் குழந்தைகளாக ஆகின்றீர்கள். நீங்கள் அனைவரும் மாயாவிடம் இருந்து பாதுகாப்பாக இருக்கின்றீர்கள் அல்லவா? அல்லது அவ்வப்பொழுது குழப்பத்தில் வந்துவிடுகின்றீர்களா? அப்படிப் பட்ட சக்கர வியூகமும் உள்ளது, அதிலிருந்து பல வழிகளில் வெளியேற வேண்டியதாக இருக்கும் என்று சொல்கின்றார்கள் அல்லவா. எந்தவொரு மாயாவின் சக்கர வியூகத்தில் மாட்டிக் கொள்பவர்கள் இல்லை தானே? ஏதாவது குழப்பம் உள்ளதா? பாதுகாப்பாக இருக்கின்றீர்களா? (ஆமாம்) இங்கே ஆமாம் என்று சொல்லிவிட்டு செல்கின்றீர்கள், மேலும், அங்கே சென்ற பிறகு இல்லை என்று சொல்பவர்களாக இருக்கக் கூடாது. எப்பொழுது ஒரு முறை சக்கரத்தில் இருந்து வெளியேறுவதற்கான வழி அல்லது விதி தெரிந்து விட்டதோ, பிறகு, மாட்டுவதற்கான விசயமே கிடையாது. மாயாவைப் பற்றியும் நல்ல முறையில் அறிந்து கொண்டீர்கள் அல்லவா, அல்லது சில நேரங்களில் அறியாதவர்கள்

ஆகிவிடுகிறீர்களா? பிறகு, இது மாயா என்று எங்களுக்கு தெரியவே இல்லை என்று கூறுகின்றார்கள். ஏனெனில், தற்காலத்தின் ஃபேஷனாக (நாகரீகம்) விதவிதமான முகமூடியை அதிகமாக அணிந்து கொள்கின்றார்கள். இந்த நொடி ஒருவிதமாக இருப்பார்கள், அடுத்த நொடி வேறு விதமாக ஆகிவிடுவார்கள். மாயாவிடமும் இந்த மாட்டவைக்கும் முகம் நிறைய உள்ளது. அதனிடம் நல்ல, பெரிய கடை உள்ளது. எந்த நேரம் எந்த ரூபத்தை தாரணை செய்ய விரும்புகிறதோ, அந்த நேரம் தாரணை செய்துவிடுகிறது. மேலும், ஒருவேளை தெரிந்தோ தெரியாமலோ மாட்டிக்கொண்டால் பிறகு வெளியேறுவதற்கு அதிக சமயம் எடுக்கிறது. சங்கமயுகத்தின் ஒரு நொடி வீணாகக் கழிவது என்றால் ஒரு வருடத்தை இழப்பது என்பதாகும், ஒரு விநாடியை அல்ல. சங்கமயுகம் எவ்வளவு சிறியது என்பதை நீங்கள் சிந்தித்துப் பாருங்கள். இப்பொழுதோ வைரவிழாவைக் கொண்டாடிக் கொண்டு இருக்கின்றீர்கள். மேலும், இந்த குறைவான சமயத்தில் என்ன ஆகவேண்டுமோ, என்ன சேமிக்க வேண்டுமோ, அந்த நிலையை இப்பொழுதே அடையமுடியும். எனவே, பாப்தாதா பார்த்துக்கொண்டு இருந்தார்கள் - ஆகுவதற்கான சமயமோ மிகவும் குறைவாக உள்ளது மற்றும் முழு கல்பத்திற்காகவும் ஆகின்றீர்கள். 5 ஆயிரம் எங்கே மற்றும் இப்போது 60 வருடங்கள் எங்கே, இன்னும் எவ்வளவு சமயம் வேண்டுமானாலும் இருக்கட்டும், ஆனால், ஆயிரக்கணக்கான எண்ணிக்கையில் இருக்காது அல்லவா!

எனவே, இந்தக் குறைவான சமயத்தில் இராஜ்ய அதிகாரி ஆகுவதற்காக அல்லது இராயல் குடும்பத்தில் வருவதற்காக என்ன செய்ய வேண்டும்? எண்ணிக்கையின் கணக்குப்படி சத்யுகத்தில் விஷ்வத்தின் சிம்மாசனம் அனைவருக்கும் கிடைக்க முடியாது. முதல் இலட்சுமி நாராயணன் அரியணையில் அமர்வார்கள், ஆனால், யார் முதல் இலட்சுமி நாராயணரின் இராயல் குடும்பத் தினரோ, அவர்களுக்கும் அந்தளவு அனைவரிடம் இருந்தும் அன்பும், மரியாதையும் கிடைக்கின்றது. ஒருவேளை, முதல் இராஜ்யத்தின் இராயல் குடும்பத்தில் வந்தாலும் அவர்கள் முதல் நம்பர் தான். பெரிய அரியணையில் அமரவில்லை, ஆனால், பிராப்தி நம்பர் ஒன் என்ற கணக்கில் தான் உள்ளது. இல்லையெனில், உங்கள் அனைவருக்கும் திரேதாயுகம் வரை கூட சிம்மாசனம் கிடைக்காது. ஆனால், விஷ்வ இராஜ்ய அதிகாரி ஆகுவதற்கான இலட்சியம் அனைவருக்கும் உள்ளது அல்லவா? அல்லது அங்கேயும் ஒரு மாநிலத்தின் இராஜா ஆகுவீர்களா? முதல் நம்பர் இராயல் குடும்பத்தில் வருவது என்பது கூட சிரேஷ்ட முயற்சி ஆகும். சிலருக்கு சிம்மாசனம் கிடைக்கின்றது, மற்றும் சிலருக்கு இராயல் குடும்பம் கிடைக்கின்றது. இதிலும் ஆழமான இரகசியம் உள்ளது.

யார் சதா சங்கமயுகத்தில் தந்தையினுடைய இதய சிம்மாசனதாரியாக இயல்பாக மற்றும் சதா இருக்கின்றார்களோ, சில நேரங்களில் அல்லாமல், யார் சதா ஆரம்பம் முதல் இறுதி வரை கனவிலும் கூட, எண்ணத்தளவிலும் கூட தூய்மையினுடைய விரதத்தில் சதா இருக்கின்றார் களோ, கனவிலும் கூட தூய்மையற்ற நிலை தொடவில்லையோ, அப்படிப்பட்ட சிரேஷ்ட ஆத்மாக் கள் இதய சிம்மாசனதாரி ஆகமுடியும். யார் நான்கு பாடங்களிலும் நல்ல மதிப்பெண்கள் (நம்பர்) பெற்றிருக்கின்றார்கள், ஆரம்பம் முதல் இறுதி வரை நல்ல மதிப்பெண் எடுத்து தேர்ச்சி அடைந்து இருக்கின்றார்களோ, அவர்களைத்

தான் மதிப்புடன் தேர்ச்சி பெறுபவர்கள் (பாஸ் வித் ஆனர்) என்று கூறப்படுகிறது. இடை இடையில் மதிப்பெண்கள் குறைந்துவிட்டது பிறகு, மேக்கப் (சரி) செய்யப் பட்டது என்று மேக்கப் செய்பவர்கள் அல்ல, ஆனால், ஆரம்பத்தில் இருந்து நான்கு பாடங்களிலும் தந்தையின் உள்ளத்திற்குப் பிடித்தமானவர்களே, சிம்மாசனத்தைப் பெற முடியும். இதன் கூடவே யார் பிராமண உலகில் அனைவருக்கும் அன்பானவராக, அனைவருடைய சகயோகியாக இருக்கின்றார்களோ, பிராமண பரிவாரத்தின் ஒவ்வொருவரும் உள்ளத்தில் இருந்து மரியாதை செய்கின்றார்களோ, அப்படிப்பட்ட மரியாதைக்குரியவர்கள் சிம்மாசனதாரி ஆகமுடியும். ஒருவேளை, இந்த விசயங்களில் ஏதாவது குறைபாடு இருக்கிறது என்றால், அவர்கள் வரிசைக் கிரமமாக இராயல் குடும்பத்தில் வரமுடியும். முதலிலும் வரலாம், எட்டாவதிலும் வரலாம், திரேதாயுகத்திலும் வரலாம். எனவே, ஒருவேளை, சிம்மாசனதாரி ஆகவேண்டும் என்றால் இந்த அனைத்து விசயங்களையும் சோதனை செய்யுங்கள். ஒருவேளை, சேவையில் 100 மதிப்பெண்கள் சேமிப்பாகி உள்ளது மற்றும் தாரணையில் 25 சதவிகிதம் உள்ளது என்றால் என்ன ஆகும்? அவர்கள் அதிகாரி ஆகுவார்களா? சில குழந்தைகள் மற்ற பாடங்களில் முன்னால் சென்றுவிடு கின்றார்கள், ஆனால், நடைமுறை தாரணையில் சமயம் எப்படிப்பட்டதாக உள்ளதோ, அப்படி தன்னை வளைத்துக் கொடுப்பவர்களே உண்மையான தங்கம் ஆவார்கள். சில நேரங்களில் மாயா குழந்தைகளை விட புத்திசாலி ஆகிவிடுகிறது. அது துரிதமாக சமயத்தின் அனுசாரம் சொரூபத்தை தாரணை செய்துவிடுகிறது, ஆனால், குழந்தைகள் என்ன சொல்கிறார்கள்? தந்தையிடமோ அனைவருடைய விசயங்களும் வருகின்றன அல்லவா. இப்படியும் நடக்கின்றது - ஒருவர் தவறு மற்றும் இன்னொருவர் சரி என்று வைத்துக்கொள்ளுங்கள். இருவரிடத்திலும் ஏதாவது குறைபாடு உள்ளது, ஆனால், நீங்கள் தன்னை முற்றிலும் சரி என்று புரிந்திருக்கின்றீர்கள் மற்றும் மற்றவர் முற்றிலுமே தவறு தான், நீங்கள் சரி மற்றும் அவரோ தவறு, ஆனாலும், எப்படி நேரமோ, எப்படி வாயுமண்டலம் உள்ளதோ, அப்படி தன்னைத் தான், கரைக்க வேண்டியதாக உள்ளது, அழிக்க வேண்டியதாக உள்ளது, ஒதுக்க வேண்டியதாக உள்ளது. ஆனால், குழந்தைகள் என்ன சொல்கின்றார்கள் - ஒவ்வொரு விசயத்திலும் ஒவ்வொரு நேரமும் நான் தான் சாக வேண்டுமா என்ன! என்று சொல்கின்றார்கள்! சாவதற்கு நான், மகிழ்ச்சியைக் கொண்டாடுவதற்கு அவர்களா! சதா இறக்க வேண்டும், இந்த இறப்போ மிகவும் கடினமானதாகும், மறுபிறப்பு எடுத்துவிட்டீர்கள், அது சகஜம். பிரம்மாகுமார், பிரம்மாகுமாரி ஆகிவிட்டீர்கள், இந்த மறுபிறப்பு எடுத்துவிட்டீர்கள் அல்லவா. இந்த இறப்போ மிகவும் சுலபமாகிவிட்டது. இறந்துவிட்டீர்கள், பிரம்மாகுமாரி ஆகிவிட்டீர்கள். ஆனால், அடிக்கடி இறப்பது என்பது மிகவும் கடினம் ஆகும். கடினம் அல்லவா? நாங்கள் தான் அதிகமாக சாக வேண்டியதாக உள்ளது என்று சிறியவர்கள் சொல்கின்றார்கள் மற்றும் நாங்கள் தான் அதிகமாகக் கேட்க வேண்டியதாக உள்ளது என்று பெரியவர்கள் சொல்கின்றார்கள். நீங்கள் பொறுத்துக் கொள்ள வேண்டியதாக உள்ளது, அவர்கள் கேட்க வேண்டியதாக உள்ளது, எனில், மரணம் யாருக்கு ஏற்பட்டுள்ளது? யார் இறந்தார்கள்? ஒருவர் இறந்தாரா, இருவரும் இறந்தார்களா? இருவருமே இறந்துவிட்டால் விசயம் முடிந்துவிட்டது, விளையாட்டு முடிந்துவிட்டது. மரணிக்கத் தெரிகிறதா அல்லது கொஞ்சம் கடினமாக உள்ளதா? கொஞ்சம் மூச்சு இரைக்கிறதா, மூச்சுவிடுவது கடினமாக உள்ளது. கடினமாக உள்ளதா? நான் தான் சாக

வேண்டுமா என்ன, நான் தான் மாற வேண்டுமா, மாறுவதற்கான பொறுப்பு எனக்குத் தான் உள்ளதா என்ன! என்று அந்த நேரம் கூறுகின்றீர்கள் அல்லவா. மற்றவருக்கும் உள்ளது. நீங்கள் இவ்வளவு இறந்து விடுங்கள், நான் இவ்வளவு இறந்து விடுகிறேன் என்று பாதி பாதி பகிர்ந்து கொள்ளுங்கள். பாப்தாதாவிற்கு அந்த சமயம் கருணையும் அதிகமாக வருகிறது, ஆனால், இந்த இறப்பு இறப்பல்ல. இந்த மரணம் சதா காலத்திற்கும் உயிர் வாழ்வதாகும். இறந்து போகாமல் சொர்க்கம் கிடைக்காது என்று மக்கள் கூறுகின்றார்கள் அல்லவா. அந்த மரணத்தினால் சொர்க்கம் கிடைப்பதில்லை, ஆனால், இந்த மரணத்தினால் சொர்க்கத்தின் அதிகாரம் கிடைக்கும், ஆகையினால், இந்த மரணமடைவது என்றால் இராஜ்ய அதிகாரி ஆகுவது என்பதாகும். மரணிக்க வேண்டுமே மரணிக்க வேண்டுமே என்றும், பொறுத்துக் கொள்ள வேண்டும் என்றும் பயப்படுகின்றீர்கள் அல்லவா, ஆகையினால், சிறிய விசயம் பெரியதாகிவிடுகிறது. நீங்கள் யோசித்துப் பாருங்கள் - எந்தவொரு கொள்ளைக்காரனோ அல்லது திருடனோ இல்லை, ஆனால், கொள்ளைக்காரன் இருக்கின்றான், திருடன் இருக்கின்றான் என்ற பயம் உங்களுக்கு உள்ளது என்றால் பயத்தினால் என்ன ஆகிறது? பயத்தினால் இதயத் துடிப்பு ஏறி இறங்கும் அல்லது இரத்த அழுத்தம் ஏறி இறங்கும். பயத்தினால் ஏற்படுகிறது அல்லவா? பயப்படுகின்றீர்கள். மரணிப்பது ஒன்றும் பெரிய விசயம் அல்ல, ஆனால், உங்களுடைய பயம் பெரிய விசயமாக ஆக்கிவிடுகிறது, பிறகு, எனக்கு என்னவாகிறது, தெரியவில்லையே! என்று கூறுகின்றார்கள். ஆனால், எவ்வாறு தைரியத்துடன் மறுபிறப்பு எடுப்பதில் பயப்பட வில்லை, குஷி குஷியாக எடுத்தீர்கள், அதுபோலவே குஷி குஷியாக பரிவர்த்தனை செய்ய வேண்டும். மரணம் என்ற வார்த்தை கூடாது. ஆனால், நீங்கள் மரணம் மரணம் என்ற வார்த்தை சொல்லிவிடுகின்றீர்கள், ஆதலால் பயப்படுகின்றீர்கள். உண்மையில் இது மரணம் அல்ல, ஆனால், தன்னுடைய தாரணை என்ற பாடத்தில் நம்பர் பெறுவதாகும். பொறுத்துக் கொள்வதற்கு பயப்படாதீர்கள். ஏன் பயப்படுகின்றீர்கள்? ஏனெனில், பொய்யான விசயத்தில் நான் ஏன் பொறுத்துக் கொள்ள வேண்டும்? என்று நினைக்கின்றீர்கள். ஆனால், பொறுத்துக் கொள்வதற்கான கட்டளை யார் கொடுத்து இருக்கின்றார்கள்? பொய் பேசுபவர்கள் கொடுத்து இருக்கின்றார்களா? சில குழந்தைகள் பொறுத்துக் கொள்ளவும் செய்கின்றார்கள், ஆனால், வலுக்கட்டாயமாக பொறுத்துக் கொள்வது மற்றும் அன்போடு பொறுத்துக் கொள்வது - இதில் வேறுபாடு உள்ளது. விசயத்தின் காரணத்தினால் பொறுத்துக் கொள்ளவில்லை, ஆனால், தந்தையின் கட்டளை பொறுமைசாலியாக ஆகுங்கள் என்பது. எனவே, தந்தையின் கட்டளையை ஏற்று நடக்கின்றீர்கள், எனில், பரமாத்மாவின் கட்டளையை ஏற்றுக் கொள்வது என்பது மகிழ்ச்சியான விசயம் அல்லவா, அல்லது வலுக்கட்டாயமாகத் தோன்றுகிறதா? சில நேரம் பொறுத்துக் கொள்ளவும் செய்கின்றீர்கள், ஆனால், கொஞ்சம் கலப்படம் ஆகிவிடுகிறது, அன்பும் உள்ளது, நிர்பந்தமும் உள்ளது. பொறுத்துக் கொண்டும் இருக்கின்றீர்கள், எனில், ஏன் குஷியுடன் பொறுத்துக் கொள்ளக் கூடாது. வலுக்கட்டாயமாக ஏன் செய்ய வேண்டும்? அந்த மனிதர் முன்னால் வருகின்றார் அல்லவா, அப்பொழுது நிர்பந்தம் ஏற்படுகிறது மற்றும் தந்தை முன்னால் வந்தார் என்றால் தந்தையினுடைய கட்டளையை கடைப்பிடித்துக் கொண்டு இருக்கின்றேன் என்று அன்பு ஏற்படுகிறது, நிர்பந்தம் அல்ல. எனவே, இந்த வார்த்தையை நினைக்காதீர்கள். தற்சமயத்தில் இது கொஞ்சம் சாதாரணம் ஆகிவிட்டது - சாக

வேண்டியதாக உள்ளது, சாக வேண்டியதாக உள்ளது, எதுவரை சாக வேண்டும், இறுதி வரைக்குமா அல்லது இரண்டு வருடத்திற்கா, ஒரு வருடத்திற்கா, ஆறு மாதத்திற்கா, பிறகு, நல்லது...... இறந்து போகிறே.... ஆனால், எதுவரை இறக்க வேண்டும்? என்று சொல்கின்றார்கள். ஆனால், இது மரணம் அல்ல, அதிகாரத்தைப் பெறுவது ஆகும். எனவே, என்ன செய்வீர்கள்? இறந்து போவீர்களா? இந்த மரணம் என்ற வார்த்தையை அழித்துவிடுங்கள். மரணம் என்று நினைக்கின்றீர்கள் அல்லவா ஆகை யினாலேயே, மரணத்தினால் பயம் ஏற்படுகிறது அல்லவா. பாருங்கள், தன்னுடைய மரணத்தை விடுங்கள், சிலர் பிறருடைய மரணத்தைப் பார்த்தும் பயப்படுகின்றார்கள். ஆகையினால், இந்த வார்த்தையை மாற்றிவிடுங்கள், இந்த மாதிரியான வார்த்தையைப் பேசாதீர்கள். சுத்தமான பேச்சு பேசுங்கள். பிராமணர்களின் டிக்ஷனரியில் இந்த வார்த்தையே கிடையாது. யார் இதை ஆரம்பித்தார்கள் என்று தெரியவில்லை. ஆரம்பித்தவரோ உங்களில் ஒருவர் தானே அல்லவா! நீங்கள் என்றால் யார் எதிரில் அமர்ந்திருக்கின்றீர்களோ, அவர்கள் அல்ல. பிராமணர்கள் தான் செய்திருக்கிறார்கள். பாப்தாதா இந்த ஒரு உதாரணத்தை சொல்லி இருக்கின்றார்கள், ஆனால், முழு நாளில் அத்தகைய வீணான பேச்சு அல்லது கேலியான பேச்சு அதிகமாகப் பேசுகின்றார்கள், நல்ல பேச்சு பேசமாட்டார்கள், ஆனால், என்னுடைய பாவனை அப்படி அல்ல, நகைச்சுவையாகச் சொல்லி விட்டேன் என்று சொல்வார்கள். இப்படிப்பட்ட பரிகாசம் பிராமண வாழ்வில் உங்களுடைய நியமங்களில் உள்ளதா என்ன? எழுதப்படவில்லை தானே? பரிகாசம் செய்யலாம் என்று எப்பொழுதாவது படித்திருக்கிறீர்களா? நகைச்சுவையாகப் பேசுங்கள், ஆனால், ஞானயுக்த், யோகயுக்த் ஆகி பேசுங்கள். மற்றபடி வீணான பரிகாசத்தை நீங்கள் நகைச்சுவை என நினைக்கின்றீர்கள், ஆனால், பிறருடைய மனநிலை தடுமாறுகிறது, எனவே, இது நகைச்சுவையாகுமா அல்லது புண்படுத்தியதாகுமா?

இன்று பாப்தாதா பார்த்தார்கள் - ஒன்று அனைவரும் பூர்வஜ் ஆவீர்கள் மற்றும் இரண்டாவது அனைவரையும் விட பெரியதிலும் பெரிய பூஜைக்குரிய ஆத்மாக்களும் நீங்களே ஆவீர்கள். உங்களுக்கு நடக்கும் பூஜை போல் முழு கல்பத்தில் எவருக்கும் நடப்பதில்லை. எனவே, நீங்கள் பூர்வஜ்ஜும் ஆவீர்கள் மற்றும் பூஜைக்குரியவரும் ஆவீர்கள். ஆனால், பூஜைக்குரியவர் என்பதிலும் வரிசைக்கிரமம் உள்ளது. யாரெல்லாம் பிராமணர் ஆகின்றார்களோ, அவர்களுடைய பூஜை கண்டிப்பாக நடக்கின்றது, ஆனால், சிலருக்கு விதிப்பூர்வமாக நடக்கின்றது, சிலருக்கு உள்ளப்பூர்வ மாக இல்லாமல் பெயரளவில் நடக்கின்றது. பிராமணர்கள் யார் இங்கே யோகத்தில் அமர் கின்றார்கள், ஆனால், பெயரளவிற்கு அமர்கின்றார்கள் - கொஞ்சம் தூங்கினார்கள், கொஞ்சம் யோகம் செய்தார்கள், கொஞ்சம் வீணானதை சிந்தித்தார்கள் மற்றும் கொஞ்சம் சுபமானதை சிந்தித்தார்கள் எனில் இது பெயரளவிற்கு செய்ததாகிவிட்டது அல்லவா. வெள்ளை லைட் போடப் பட்டதும், வேலை முடிந்து விட்டது, இதுபோல் தாரணையில் கூட பெயரளவிற்கு செய்பவர்கள் அதிகம் உள்ளனர். ஏதாவது சூழ்நிலை வரும்பொழுது இப்பொழுது இப்படி செய்து ஒப்பேற்றுங்கள், பின்னால் பார்த்துக் கொள்ளலாம் என்று சொல்வார்கள். இப்பேற்பட்டவர்களுடைய பூஜையும் பெயரளவிற்கு நடக்கிறது. பாருங்கள், இலட்சகணக்கான சாலிகிராமங்களை உருவாக்குகின்றார்கள், ஆனால், என்ன நடக்கின்றது? விதிப்பூர்வமாக பூஜை

நடக்கின்றதா? பெயரளவிற்கு நடக்கின்றது அல்லவா! பைப்பைக் கொண்டு தண்ணீர் அடிக்கப்படுகிறது மற்றும் திலகத்தைக் கூட கிண்ணத்தில் நிறைத்து பண்டிதர்கள் அப்படி அப்படி தெளித்துவிடுவார்கள். திலகம் ஒட்டிக்கொள்ளும். எனில், இது என்ன? பெயரளவில் நடந்தது அல்லவா. பூஜைக்குரியவர்களாக அனைவரும் ஆகின்றீர்கள், ஆனால், எப்படிப்பட்ட பூஜைக்குரியவர்கள் ஆகின்றீர்கள், இதில் வரிசைக்கிரமம் உள்ளது. சிலருடைய ஒவ்வொரு கர்மத்திற்கும் பூஜை நடக்கிறது. பல் துலக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்ற பல் துலக்கும் தூரிகையினுடைய தரிசனமும் உள்ளது. மதுராவிற்கு சென்றீர்கள் என்றால் இந்த சமயம் பல் துலக்கும் சமயம் என்று பல் துலக்கும் தூரிகையின் தரிசனம் காண்பிக் கின்றார்கள். பெயரளவு செய்பவர்கள் ஆகக்கூடாது. இல்லையென்றால் பூஜையும் அவ்வாறு நடக்கும்.

நல்லது. அனைத்து டீச்சர்களும் குஷியாக இருக்கின்றீர்களா? அல்லது ஏதாவது ஆசை இப்பொழுது வரை மனதில் உள்ளதா? எந்தவொரு ஆசையும் (இச்சை) இருந்தால் நல்லவராக (அச்சா) ஆகவிடாது. ஒன்று ஆசையைப் பூர்த்தி செய்யுங்கள் அல்லது நல்லவராக ஆகுங்கள் - இது உங்களுடைய கையில் உள்ளது. மேலும், பார்க்கப்போனால் இந்த ஆசை அப்படிப்பட்ட விசயமாகும் - எவ்வாறு வெயிலில் நீங்கள் செல்கின்றீர்கள் என்றால் உங்களுடைய நிழல் முன்னால் செல்கிறது மேலும், நீங்கள் அதைப் பிடிப்பதற்கு முயற்சி செய்கிறீர்கள் என்றால் பிடிக்க முடியுமா? மேலும், நீங்கள் பின்னால் வந்தீர்கள் என்றால் அந்த நிழல் எங்கு செல்லும்? உங்கள் பின்னாலேயே வரும். எனவே, ஆசை என்பது தன் பக்கம் கவர்ச்சி செய்து அழவைக்கக் கூடியது மற்றும் ஆசையை விட்டுவிடுங்கள், அப்பொழுது ஆசை உங்களுக்குப் பின்னால் வரும். யாசிப்பவர்கள் (வேண்டுபவர்கள்) ஒருபொழுதும் சம்பன்னம் ஆகமுடியாது. வேறு எதுவும் கேட்பதில்லை ஆனால், இராயல் யாசகமோ அதிகம் உள்ளது. அல்பகாலத்திற்கான பெயர் கொஞ்சம் கிடைக்க வேண்டும், சிறிது புகழ் கிடைக்க வேண்டும், சில நேரம் என்னுடைய பெயரும் விசேஷ ஆத்மாக்களில் வர வேண்டும், நானும் மூத்த சகோதரர்களில் ஒருவராக கருதப்பட வேண்டும், நானும் மூத்த சகோதரிகளில் ஒருவராக மரியாதை செய்யப்பட வேண்டும், இறுதியாக, எனக்கும் வாய்ப்பு கிடைக்க வேண்டும் என்பவை போன்ற இராயல் யாசகத்தைப் பற்றி அறிந்திருக்கின்றீர்கள் தானே. ஆனால், எதுவரை வேண்டுதல் உள்ளதோ, அதுவரை ஒருபொழுதும் குஷியின் பொக்கி^த்தால் சம்பன்னம் ஆகமுடியாது. இந்த யாசகத்திற்குப் பின்னால் அல்லது ஏதாவது எல்லைக்குட்பட்ட ஆசைகளுக்குப் பின்னால் ஓடுவது என்பது கானல் நீருக்கு சமமானது என்று புரிந்துகொள்ளுங்கள். இதிலிருந்து எப்பொழுதுமே பாதுகாப்பாக இருங்கள். சிறியவராக இருப்பது ஒன்றும் மோசமான விசயம் அல்ல. சிறியவர்கள் அல்லாவிற்கு சமமானவர்கள், ஏனென்றால், பாப்தாதாவினுடைய உள்ளத்தில் நம்பர் முன்னதாக இருக்கின்றீர்கள். அல்பகாலத் திற்கான ஆசையினுடைய அனுபவத்தை செய்து பார்த்திருப்பீர்கள், அது அழ வைக்கின்றதா அல்லது சிரிக்க வைக்கின்றதா? அழவைக்கிறது அல்லவா! எனவே, அழுங்கள் என்பது இராவணனுடைய கட்டளை, நீங்களோ தந்தையினுடையவர் ஆவீர்கள் அல்லவா, எனில், தந்தை சிரிக்க வைப்பவரா அல்லது அழவைப்பவரா?

இன்று பாப்தாதா விசேஷமாக இதன் மீது கவனத்தை ஏற்படுத்திக்

கொண்டிருக்கின்றார்கள் - வீணான பேச்சு, எது பிறருக்கு பிடிப்பதில்லை, உங்களுக்குப் பிடிக்கிறது ஆனால், பிறருக்குப் பிடிப்பதில்லை என்றால் சதா காலத்திற்கும் அந்தப் பேச்சை முடிவடையச் செய்துவிடுங்கள். இவ்வாறு முழு நாளில், ஒருவேளை, பாப்தாதா தன்னிடம் குழந்தைகளுடைய வார்த்தைகளை நோட் செய்தால் நிறைய ஃபைல் உருவாகிவிடும். இந்த வகைச் சொல், வீண் பேச்சு, சப்தமாகப் பேசுவது. . . இந்த சப்தமாகப் பேசுவது கூட உண்மையில் பலரை தொந்தரவு செய்யக் கூடியது தான். என்னுடைய சப்தமே பெரியது என்று சொல்லாதீர்கள். மாயாவை வென்றவராக ஆக முடிகிறது மற்றும் சப்தத்தை வென்றவராக ஆக முடியாதா! இவ்வாறு ஒருவரை டிஸ்டர்ப் செய்யக்கூடிய பேச்சு மற்றும் வீணான பேச்சு பேசாதீர்கள். இரண்டு வார்த்தைகள் பேசுவதற்கான விசயமாக இருக்கும், ஆனால், அரை மணி நேரம் அந்த விசயத்தைப் பேசிக் கொண்டே இருப்பார்கள், பேசிக் கொண்டே இருப்பார்கள். நீளமாக என்ன பேச்சு பேசுகின்றீர்களோ, நான்கு வார்த்தைகளில் வேலையை முடிக்க முடியும் என்றால் அதை 12-15 வார்த்தைகளாகப் பேசாதீர்கள். உங்களுடைய சுலோகன் - குறைவாகப் பேசுங்கள், மெதுவாகப் பேசுங்கள் என்பதாகும். என்னுடைய சப்தம் மிகவும் பெரியது, நான் விரும்பவில்லை, ஆனால், சப்தமே பெரியதாக உள்ளது என்று சொல்கின்றீர்கள் அல்லவா. அப்படிப்பட்டவர்கள் கழுத்தில் ஒரு சுலோகனை தயார் செய்து மாட்டிக் கொள்ள வேண்டும். நடப்பது என்ன? நீங்கள் தன்னுடைய ஆர்வத்தில் மிகவும் சப்தமாக பேசிக் கொண்டு இருக்கின்றீர்கள், ஆனால், போகின்றவர்கள், வருகின்றவர்கள் இவர்களுடைய சப்தம் பெரியதாக உள்ளது என்று புரிந்துகொள்ள மாட்டார்கள். தெரியவில்லை, ஏதோ சண்டை நடந்து கொண்டிருக்கிறது போலும் என்று அவர்கள் நினைப்பார்கள். எனவே, இதுவும் டிஸ்சர்வீஸ் ஆகிவிட்டது. ஆகையினால், இன்றைய பாடமாக - வீணான வார்த்தை அல்லது யாரையாவது தொந்தரவு (டிஸ்டர்ப்) செய்யக் கூடிய பேச்சிலிருந்து தன்னை விடுவித்துவிடுங்கள் என்று கூறிக்கொண்டு இருக்கின்றார்கள். வீணான பேச்சிலிருந்து விடுபட்டவர் ஆகுங்கள். பிறகு பாருங்கள், அவ்யக்த ஃபரிஷ்தா ஆகுவதற்கு உங்களுக்கு மிகுந்த உதவி கிடைக்கும். பேச்சு, பேச்சு, பேச்சு என்று பேசிக்கொண்டே இருக்கின்றீர்கள். ஒருவேளை, பாப்தாதா அதை டேப்பில் பதிவு செய்து உங்களுக்குப் போட்டுக் காட்டினால் உங்களுக்கும் சிரிப்பு வரும். எனவே, பாடத்தை பக்கா செய்து இருக் கின்றீர்களா? பேச்சை சிக்கனப்படுத்துங்கள், தன்னுடைய பேச்சிற்கு மதிப்பு வைத்திடுங்கள். சத்திய வார்த்தை பேசும் மகாராஜ் என்று மகாத்மாக்களைப் பற்றி கூறுகின்றார்கள் அல்லவா. அதுபோல் உங்களுடைய பேச்சு சதா சத்தியமான பேச்சாக அதாவது ஏதாவது பிராப்தியை கொடுக்கக் கூடிய பேச்சாக இருக்க வேண்டும். இவர் பைத்தியம், இவர் புத்தியற்றவர் - இவ்வாறு எவரையாவது பார்த்து, போகும்பொழுதும் வரும் பொழுதும் விளையாட்டாக சொல்லி விடுகின்றீர்கள். இப்பேற்பட்ட சில வார்த்தைகளை பாப்தாதா இப்பொழுது மறந்துவிட்டார்கள், ஆனால், கேட்கின்றார்கள். நீங்கள் சத்திய வார்த்தை பேசும் மகாராஜ், அப்பேற்பட்ட பிராமணர் களாகிய உங்களுடைய வாயிலிருந்து இப்படிப்பட்ட வார்த்தைகள் வெளிப்படுகிறது என்றால் நீங்கள் ஒருவருக்கு சாபம் கொடுக்கின்றீர்கள் என்று அர்த்தம். யாருக்கும் சாபம் கொடுக்காதீர்கள், சுகம் கொடுங்கள். யுக்தியுக்த் (ஞானம் நிறைந்த) வார்த்தை களைப் பேசுங்கள் மற்றும் அவசியமான வார்த்தைகளைப் பேசுங்கள், வீணானதைப் பேசாதீர்கள். எப்பொழுது பேச ஆரம்பிக் கின்றீர்களோ, அப்பொழுது எத்தனை வார்த்தைகள் வீணானதாக

இருந்தன மற்றும் எத்தனை வார்த்தைகள் சத்தியமானதாக இருந்தன? என்பதை ஒரு மணி நேரத்தில் சோதனை செய்யுங்கள். உங்களுக்கு உங்களுடைய பேச்சின் மதிப்பு தெரியவில்லை, பேச்சின் மதிப்பைப் புரிந்துகொள்ளுங் கள். வசைச் சொல் பேசாதீர்கள், சுப வார்த்தைகளைப் பேசுங்கள், ஏனெனில், இது கடைசி மாதம் ஆகும். அடுத்து வரும் முதல் மாதம் வைரவிழா ஆகும், எனவே, முழு வருடமும் வைரமாக ஆகுவீர்களா அல்லது 6 மாதம் ஆகுவீர்களா? முழு வருடமும் ஆகுவீர்கள் அல்லவா! ஆகையினால், பாப்தாதா வைரவிழாவிற்கு முன்னதாகவே குழந்தைகளுக்கு விசேஷ கவனத்தை ஏற்படுத்திக் கொண்டு இருக்கின்றார்கள். பாப்தாதா நாலாபுறங்களிலும் உள்ள காட்சியைப் பார்த்துக் கொண்டே இருக்கின்றார்கள். முழு நாளும் பார்த்துக் கொண்டே இருப்பதில்லை, ஒரு நொடியில் அனைத்தையும் பார்க்க முடியும். எனவே, பாடத்தை பக்கா செய்தீர்களா - முக்தி அடையவேண்டுமா? அல்லது கொஞ்சம் கொஞ்சம் யுக்தி மற்றும் கொஞ்சம் கொஞ்சம் முக்தியா? ஒவ்வொருவரும் தன்னைப் பாருங்கள். பாபா வாணி சொன்னார், பிறகும் இவர் இவ்வாறு பேசிக் கொண்டு இருக்கின்றார் என்று ஆரம்பிக்கக் கூடாது. பிறரைப் பார்க்கக் கூடாது. நான் தந்தையின் ஸ்ரீமத்தை எந்தளவு தனதாக்கியிருக்கின்றேன் என்று தன்னைப் பாருங்கள். இவர் செய்து கொண்டு இருக்கின்றார் . . என்று இப்பொழுது ஒருவரை ஒருவர் பார்க்கின்றீர்கள். ஆனால், எப்பொழுது அதிகாரம் கிடைக்குமோ, அப்பொழுது அவர் கீழான பதவிக்கு சென்றார் என்றால் அந்த சமயம் நீங்கள் துணையாக இருப்பீர்களா? அந்த சமயம் பார்ப்பீர்களா? அந்த சமயம் பார்க்கமாட்டீர்கள். பிறகு, இப்பொழுது ஏன் பார்க்கின்றீர்கள்? நல்லது, அனைவரும் விடுபட்டுவிடுவீர்கள் அல்லவா? அனைவருக்கும் பாடம் நினைவிருக்கின்றதா? என்ன பாடம்? வீணான பேச்சிலிருந்து விடுபடுதல் . . . நினைவிருக்கின்றதா? மறக்கவில்லையே? நல்லது.

நாலாபுறங்களிலும் உள்ள பூர்வஜ் ஆத்மாக்களுக்கு, சதா இந்த நம்பிக்கை மற்றும் போதையில் இருக்கக்கூடிய சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு, சதா தந்தையின் ஸ்ரீமத் அனுசாரம் ஒவ்வொரு கர்மமும் செய்யக்கூடிய கர்மயோகி ஆத்மாக்களுக்கு, சதா திடமான எண்ணத்தினால் தந்தையின் ஒவ்வொரு அடி மீதும் அடி வைக்கக்கூடிய தந்தையைப் பின்பற்றக்கூடிய குழந்தைகளுக்கு மிக மிக அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம். இரட்டை அயல்நாட்டினருக்கு இரட்டை நமஸ்காரம்.

வரதானம் : லௌகீகத்தை அலௌகீகமாக மாற்றி வீட்டை கோவிலாக்கக் கூடிய கவர்ந்திழுக்கும் மூர்த்தி ஆகுக.

இல்லறத்தில் இருந்து கொண்டே வீட்டின் வாயுமண்டலத்தை அப்படி ஆக்குங்கள், அதில் எந்தவிதமான லௌகீகத் தன்மையும் இருக்கக் கூடாது. யார் வந்தாலும் இவர்கள் அலௌகீக மானவர்கள், லௌகீகமானவர்கள் அல்ல, இது சாதாரண வீடு அல்ல, ஆனால், கோவில் ஆகும் என்ற அனுபவம் செய்ய வேண்டும். இது தூய இல்லறவாசிகளின் சேவையினுடைய பிரத்யட்ச சொரூபம் ஆகும். இடமும் சேவை செய்ய வேண்டும், வாயுமண்டலமும் சேவை செய்ய வேண்டும். எவ்வாறு கோவிலின் வாயுமண்டலம் அனைவரையும் கவர்ச்சி செய்கிறதோ, அதுபோல் உங்களுடைய வீட்டிலிருந்து தூய்மையின் நறுமணம் வரவேண்டும், அப்பொழுதே அந்த நறுமணம் தானாகவே நாலாபுறங்களிலும் பரவும் மற்றும் அனைவரையும்

கவர்ந்திழுக்கும்.

சுலோகன்: மனம், புத்தியை திடத்தன்மையோடு ஒருமுகப்படுத்தி பலவீனங்களை எரித்துவிடுங்கள் - அப்பொழுதே உண்மையான யோகி என்று சொல்ல முடியும்.

குறிப்பு: இன்று மூன்றாவது ஞாயிற்றுக்கிழமை சர்வதேச யோகா தினம் ஆகும். அனைத்து சகோதர, சகோதரிகளும் மாலை 6.30 முதல் 7.30 மணி வரை ஆத்மாவாகிய என்னிடமிருந்து தூய்மையின் கிரணங்கள் வெளிப்பட்டு முழு உலகத்தையும் தூய்மை ஆக்கிக்கொண்டு இருக்கின்றது. நான் மாஸ்டர் பதீத பாவனி ஆத்மா என்ற அனுபவம் செய்ய வேண்டும்.